# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 262A/மா/2025
நாள் 09.06.2026

J. சண்முகசுந்தரம்,
பவானி . --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

(1) ஈரோடு மாவட்டம், பவானி, நியூ வார்டு எண் 19, காவேரி தெரு, கதவு எண் 236, திரு. J. சண்முகசுந்தரம் என்பவரின் முறையீட்டு மனு நாள் 15.07.2025.

(2) ஈரோடு மாவட்டம், பவானி, நியூ வார்டு எண் 19, காவேரி தெரு, கதவு எண் 236, திரு. J. சண்முகசுந்தரம் என்பவரின் மின்னஞ்சல் மனு நாள் 31.01.2026.

(3) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவ ஆணை எண் 262/மா/2025, நாள் 13.03.2026.

(4) ஈரோடு மாவட்டம், பவானி, நியூ வார்டு எண் 19, காவேரி தெரு, கதவு எண் 236, திரு. J. சண்முகசுந்தரம் என்பவரின் மனு நாள் 26.03.2026.

(5) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற விசாரணை அழைப்பாணை கடித எண் 262/மா/2025 நாள் 30.03.2026.

(6) ஈரோடு மாவட்டம், பவானி, நியூ வார்டு எண் 19, காவேரி தெரு, கதவு எண் 236, திரு. J. சண்முகசுந்தரம் என்பவரின் மனு நாள் 17.04.2026.

*****

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட மனுதாரரின் முறையீட்டு மனு மீது இம்முறை மன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொண்டு பார்வை மூன்றில் படிக்கப்பட்ட ஆணை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்டது.

2. பார்வை நான்கில் படிக்கப்பட்ட மனுதாரர் கடிதத்தில், மேற்கண்ட ஆணையில் கீழ்க்கண்டவைகள் தட்டச்சு செய்யாமல் விடுபட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்:–

1) In page no:3 in para 6 in the above TNLBO Order. "I, J. Shanmuga sundaram, s/o Late K. T. Jayabalan peace loving and law abiding citizen (aged 50 years) residing from day one of my birth at Door No.236, Cauvery Street, New Ward No.19, Bhavani-638 301" in my e-mailed on 31.01.2025 to your good office and to opposite parties with below mentioned line before the above paragraph
**"MY REQUEST FOR ADJOURNMENT OF HEARING 03.02.2026 TO SOME OTHER DATE IN MARCH 2026 END (CONTAINS 2 PAGES) Via email REFERENCE: TNLBO ORDER 104/C/2024 DT 06.11.2025"**

2) In page no.4 in para 3 (3) **MY AND xxxxxxxx OP SLIP REG AT ERODE GHQH WITH ONLY NAME, AGE AND SEX AS ITS DETAIL--**

3. மேற்கண்ட மனு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் **17.04.2026** அன்று நடைபெறும் விசாரணைக்கு மனுதாரரை ஆஜராகுமாறு பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. மனுதாரர் **17.04.2026** அன்று நடைப்பெற்ற விசாரணையில் நேரில் ஆஜராகி, ஒரு எழுத்து பூர்வமான புதிய மனுவினை சமர்ப்பித்தார். இப்புதிய மனுவினை பரிசீலிக்கும் பொருட்டு, அன்றைய விசாரணையை ஒரு மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டு, நண்பகல் **12.00** மணியளவில் விசாரணை நடைபெற்றது.

5. மனுதாரர் **17.04.2026** அன்றைய விசாரணையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“இன்று **17.04.2026** முற்பகல் **11.30** மணியளவில் நடைபெறும் விசாரணைக்கு வந்தபோது என்னால் **17.04.2026** நாளிட்ட மனு அளிக்கப்பட்டது. இம்மனுவினை பரிசீலனைக்கும் பொருட்டு விசாரணை ஒரு மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டு நண்பகல் **12.00** மணியளவில் விசாரணை தொடங்கப்பட்டது.

கேள்வி **1)** தங்களின் **26.03.2026** நாளிட்ட மனுவில் கோரியவாறு இம்முறைமன்ற **ஆணை எண்.262/மா/2025** நாள் **13.03.2026**ல் திருத்தம் செய்யப்பட வேண்டுமா?

<u>பதில்</u> : ஆம் நான் கூறியவாறு மேற்கண்ட ஆணையில் பக்கம் **3** பத்தி **6** – “மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு, தெரிவித்துள்ளார்” – பிறகு

**“MY REQUEST FOR ADJOURNMENT OF HEARING 03.02.2026 TO SOME OTHER DATE IN MARCH 2026 END (CONTAINS 2 PAGES) VIA E-MAIL**

**REFERENCE : TNLBO ORDER 104/C/2024 DT.06.11.2025”**

மேலும்

பக்கம் 4, பத்தி 3 (3)

MY AND OP SLIP REG. AT ERODE GHQH WITH ONLY NAME, AGE AND SEX AS ITS DETAILS. என்பதற்கு பதிலாக

பத்தி 3 (3) MY AND XXXX OP SLIP REG. AT ERODE GHQH WITH ONLY NAME, AGE AND SEX AS ITS DETAILS.
என்பது சேர்க்கப்பட வேண்டும்.

<u>கேள்வி</u> 2) இம்முறைமன்ற ஆணைஎண்.262/மா/2025 நாள் 13.03.2026ல் பக்கம் 3 பத்தி 6ல் **“application for adjournment of hearing on 03.02.2024”** என்பதற்கு பதில் **“application for adjournment of hearing on 03.02.2026”** என்று சரியான விவரம் இம்முறைமன்ற நடுவத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தாங்கள் **31.01.2026** நாளிட்ட மின்னஞ்சலில் நீங்கள் தவறாக குறிப்பிட்டுள்ள தேதி **03.02.2024**ஐ மாற்ற வேண்டுமா?

<u>பதில்</u> : நான் தவறாக குறிப்பிட்டுயிருந்தாலும், அது தவறு தான். எனவே மேற்கண்ட ஆணையில் **பக்கம் 3 பத்தி 6ல் 03.02.2026** என்று இம்முறை மன்றத்தால் குறிப்பிட்டுள்ளதை, **31.01.2026** நாளிட்ட எனது மனுவில் “நான் தவறாக தெரிவித்த தேதியான **03.02.2024**” என்று திருத்தம் செய்யலாம்.

<u>கேள்வி 3)</u> தாங்கள் **26.03.2026** நாளிட்ட மனுவில் இம்முறைமன்ற நடுவ ஆணை **எண்.262/மா/2025** நாள் **13.02.2026**ல் திருத்தம் வேண்டி கோரிக்கை விடப்பட்டு அது

குறித்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அது தொடர்பாக தாங்கள் இம்முறை மன்ற நடுவத்தில் இன்று ஆஜராகிய நிலையில், இன்றைய விசாரணையில் **17.04.2026** நாளிட்ட கோரிக்கையுடன் மனு எதற்காக அளிக்கப்பட்டது?

பதில்: இம்முறைமன்றத்திற்கு 15.07.2025 நாளிட்ட எனது மனு அளிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த நிலையில் விசாரணைக்கு எனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்டவாறு திருத்தம் இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.**262/மா/2025** நாள் **13.03.2026**ற்கு வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.".

இந்நேர்வில், மனுதாரர் எழுதிய வாசகங்களை அப்படியே எடுத்து கொள்ளாமல் ஆராய்ந்து சரியான விபரங்கள் பதிவிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அன்னார் திருத்த கொடுக்கப்பட்ட வாதங்கள் ஏற்புடையதாக இல்லாததால் அதில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரரின் 17.04.2026 நாளிட்ட விசாரணையின் போது வழங்கிய மனுவில் கோரியவாறு, இம்முறைமன்ற நடுவ ஆணை எண் 262/மா/2025 நாள் 13.03.2026–ல் வெளியிடப்பட்ட ஆணை குறித்து மேல்முறையீடு / சீராய்வு செய்வதற்கு எவ்வித வழிவகையும் இல்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. J. சண்முகசுந்தரம்,
கதவு எண் 236, காவேரி தெரு,
நியூ வார்டு எண் 19, பவானி–638 301,
ஈரோடு மாவட்டம்.

(2) ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி, ஈரோடு–638 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:

(1) மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
(2) ஆணை எண் 262/மா/2025 நாள் 13.03.2026.
(3) இ.கோ./உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //




செயலாளர்.